செ.வெ.எண்:401/2009(செமதொஅ) நாள். 19.11.2009

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் தலைமையில் அரசு ஊழியர்கள் எடுத்துக் கொண்டனர்.

மறைந்த முன்னாள் பாரத பிரதமர் திருமதி.இந்திராகாந்தி அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு தேசிய ஒருமைப்பாடு தினமாக நாடுமுழுவதும் அனுசரிக்கப்படுகிறது. அதனையொட்டி இன்று (19-11-2009) காலை 11.00 மணிக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலுள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியை வாசிக்க அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் உறுதிமொழியை எடுத்துக் கொண்டார்கள். இந்த உறுதிமொழி நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிராசன், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொ) திரு.ரெங்கராஜன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எம்.அசோகன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



செய்தி வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்